[1973 மார்ச் 26

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மாநில முழுவதும் காசநோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக புள்ளி விவரம் கூறுகிறது. ஆகவே அதை நீக்குவதற்கு அரசு தீவிரமான ஒரு திட்டத்தை உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அண்மைக் காலத்தில் தான் நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்குக் காசநோய் இருக்கிறதா என்ற புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு புள்ளி விவரம் தயாரிக்கப்படுகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவ்வளவு மக்கள் பரிசோதிக்கப்படவில்லை. இப்போது பரிசோதிக்கப்படுகிறவர்கள் எண்ணிக்கை அதிகப்படுவதால், நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகப் புள்ளிவிவரத்தில் காணப்படுகிறது. ஆனால் நோய் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, there is a feeling that if B.C.G. Campaign is intensified, these cases can be reduced. May I know whether the Government will think on those lines also ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, for instance, in the Nilgiris district, the Tuberculosis campaign is in force from 1963 and the B.C.G. campaign also has been intensified on two occasions; and it is proposed to intensify the B.C.G. campaign for the third time in the near future.

THIRU G. VASANTHA PAI : Sir, does the hon. Member Thiru G. Swaminathan know that his leader Thiru Rajagopalachari was against the B.C.G. vaccination ?

Express Bus Service

* 272 *Q.*—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Express Bus Service of the Tamil Nadu State Transport Department between Tiruchirappalli and Erode via Karur has been suspended at present ; and

(*b*) if so, the reasons therefor ?

1973 மார்ச் 26]

போக்குவரத்து விரைவு வண்டி.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளிக்கும் ஈரோட்டிற்குமிடையே சென்று வந்த தமிழக அரசு போக்குவரத்து விரைவு வண்டி (வழி—கரூர்) தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) வசூல் மிகக் குறைவாக இருந்தது; பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 40 சதவீதமே இருந்தது.

Tourist Taxis

*273 *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether all the Southern States have agreed to bring Tourist Taxis under single-point tax; and

(*b*) if so, the details thereof?

சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலாப் பயணிகள் மோட்டார் வண்டிகளை ஒருமுனை வரியின் கீழ்க் கொண்டு வர, தெற்கு மாநிலங்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், மைசூர் ஆகிய தென் மாநிலங்களில் மாநிலம் ஒவ்வொன்றும், மேலொப்பமின்றி ஒருமுனை வரியில் சுற்றுலா டாக்சிகள் நூறு விடலாம் என 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று கோயம்புத்தூரில் நடந்த தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]